# நடுத்தெருவில் சத்தியம்



குடிசைவாசி



பொய்களால் புனையப்படும் வாழ்வியலிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. அதற்குள்ளேயே கூண்டினுள் பட்சியாய் அலைமோத நேர்கிறது. விளைவு - ஒவ்வொரு மனிதனும் தன்னையும், தன் அடையாளத்தையும் இழந்து விடுகிற அவலம், பாழாய்ப் போன வாழ்வைச் சூழ்ந்து கொள்கிறது. தானும் ஒரு ஈயாய் மாறி மொய்ப்பதே வாழ்க்கை ஆகிவிடுகிறது. காஃப்கா தான் ஒரு கரப்பான் பூச்சியாக மாறிப் போனதாகக் கதை சொல்கிறார். அதுபோன்று ‘கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றும்’ அவலத்தை ஈயாய் மாறும் இழிவாகப் பேசும் குடிசைவாசியின் கற்பனை பாராட்டுக்குறியது.

சத்தியம் நடுத்தெருவில் நிற்கிறது; கூடை நிறையச் சத்தியம் இருந்தும், கூவிக் கூவி விற்பனை செய்ய முயன்றும் அது விற்பனையாகவில்லை என்ற ஆதங்கம் நூல் முழுவதும் விரவிக் கிடக்கிறது.

குடிசைவாசி தன் கவிதைகள் மூலம் கோபுரவாசி என்பதை நிரூபித்திருக்கிறார். அவருக்கு என் வாழ்த்துக்கள் என்றும் உரியன.

- சிற்பி பாலசுப்பிரமணியம்

# நடுத்தெருவில் சத்தியம்

குடிசைவாசி

**தமிழோசை வெளியீடு**
136, நேரு வீதி, ராம் நகர்,
கோயம்புத்தூர் 641 009

## நூல் விளக்கக் குறிப்பு

| | |
|---|---|
| நூலின் பெயர் | : நடுத்தெருவில் சத்தியம் (கவிதை நூல்) |
| ஆசிரியர் | : குடிசைவாசி (முனைவர் மோ. செந்தில்குமார்) |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : நவம்பர் 2008 |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | : 18.6 Puff |
| நூலின் அளவு | : 1/8 Crown |
| எழுத்து | : 11 புள்ளி |
| படிகள் | : 500 |
| விலை | : ரூ.35/– |
| பக்கங்கள் | : 92 |
| அச்சிட்டோர் | : பி.வி. கிராபிக்ஸ்<br>118, மேற்கு சம்பந்தம் சாலை<br>ஆர்.எஸ்.புரம், கோவை – 02 |
| வெளியீடு | : **தமிழோசை வெளியீடு**<br>136, நேரு வீதி, ராம் நகர்,<br>கோயம்புத்தூர் 641 009 |

○

# படையல்

என் கண்ணுக்கெட்டிய
தூரம் வரை காட்சிப்படும்
வையகத்தில் வாழத்துடிக்கும்
சத்தியத்திற்கு

# முன்னுரை

வள்ளுவனில், காந்தியில், பாரதியில், ஓஷோவில் உயிர்பெற்று நின்ற சத்தியம் என்ற உணர்வு இன்று வீடிழந்து, நாடிழந்து, ஏன் பூமிப்பந்தையே இழந்து இன்று விலாசம் அற்றுக் கிடக்கின்றது. சத்தியம் தெருவுக்கு வரும்போதெல்லாம் உலகம் சஞ்சலத்தில் அல்லாடுகின்றது. போகமும் சோகமும் இரு துருவங்களாய் நின்று சுழலும் இந்த உலகத்தின் கண் முன் சத்தியத்தை உயிர்ப்புடன் நிறுத்துவதற்கு என்னுள் குடிசைவாசி எழுந்து நிற்கிறான்.

எந்தக் கவிதை இயக்கத்திற்குள்ளும் என்னை அமிழ்த்துக்கொள்ளாது எனது அனுபவங்களையும், உணர்வுகளையும் கவிதையாக்கும் முயற்சியில் 'நடுத்தெருவில் சத்தியம்' என்ற இச்சிறுநூலை என் கவிதைக் குழந்தையாக தமிழ் இலக்கிய உலகிற்குள் உலவ விடுகின்றேன்.

பண்ணாரி அம்மன் செய்திமலரில் நான் முழுநேர ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் புதிது புதிதாகப் புனைப்பெயர் வைத்துக்கொண்டு கட்டுரைகள் எழுதிவந்தேன். ஒரு சமயம் நான் எழுதிய கவிதை ஒன்றைப் பிரசுரிக்க நினைத்து அதற்குப் புனைபெயர் ஒன்றைத் தேடினேன். வறுமை என் கருவறையில் நிரந்தர இடம் தேடி அமர்ந்திருந்த காலமாகையால் 'குடிசைவாசி' என்ற ஒரே ஒரு பெயரை மட்டுமே என் மனம் ஒலித்தது. பலரும் இது என்ன பெயர்? நன்றாகவா இருக்கின்றது? என்று கேட்டார்கள். எனக்கு அந்தப் பெயர் மிகவும் பிடித்திருந்தது.

வறுமையில் வாடிய நாளில் 'வறுமையின் குடிசையில் வாழ்பவன்' என்றும், அதனை விரட்டியடித்த காலத்தில் சித்தர்கள் பார்வையில் 'உடம்பென்னும் குடிசையில் வாசம் செய்பவன்' என்றும் அர்த்தப்படுத்திக் கொண்டேன்.

கல்லூரி ஆண்டு மலரில் தொடங்கிய எனது எழுத்து பின்னாளில் எனது ஞானகுரு கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களின் வழிகாட்டுதலும் தாக்கமும் பெற்றுப் பத்திரிகையில் பிரசுரமாகும் அளவுக்கு வளர்ச்சி பெற்றது. பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய திரு. எஸ்.வி. பாலசுப்ரமணியம் ஐயா அவர்கள் பண்ணாரி அம்மன் செய்திமலர் என்ற களத்தை எனக்கு அமைத்துக் கொடுத்தார்கள். எனது வாழ்க்கை வறுமையிலிருந்து வெளிவருவதற்கு வாய்ப்பும் வாழ்வும் அளித்துதவிய ஐயாவுக்கு இருகரம் கூப்பிய வணக்கங்களும், நன்றிகளும்.

இந்நூலுக்கு எனது ஞானகுருவே அணிந்துரை நல்கியதில் பெருமிதமும் உவகையும் ஒருசேரப் பெறுகின்றேன். எனது இயக்கத்தின் ஆணிவேராக இருந்து ஆக்கமும் ஊக்கமும் நல்கிவரும் அவருக்கு உள்ளன்போடு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் தேர்வில் முழுமையாக ஈடுபட்டு, கவிதைகளைச் செப்பனிட்டு ஊக்கப்படுத்திய அறிஞர் ஞானி ஐயா அவர்களுக்கு இத்தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காய்தல் உவத்தல்களைக் கடந்து நட்பில் ஊறிய நண்பர் திரு. கு. முத்துக்குமார் அவர்களும், திரு. க. ஜவஹர் அவர்களும்

இந்நூலை உருவாக்கத் தூண்டியவர்கள். அவர்களின் அன்பு உள்ளத்துக்கு எனது நன்றி மலர்கள்.

இந்நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்துள்ள பி.வி. கிராபிக்ஸ் அச்சகத்தின் உரிமையாளர் திரு. பி. வெங்கடேஷ்வரன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு உதவிடும் தமிழோசை வெளியீட்டாருக்கும் எனது உள்ளம் நிறைந்த நன்றிகள்.

**மோ. செந்தில்குமார்**

எண்.12, ஸ்ரீ இராகவேந்திரா கார்டன்,
கே.என்.ஜி. புதூர் சாலை, சுப்பிரமணியம்பாளையம்,
ஞானாம்பிகை ஆலை அஞ்சல்,
கோயம்புத்தூர் 641 029
அலைபேசி: 9842533413
மின்னஞ்சல்: senthiephoto@gmail.com

**கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்**
50, அழகப்பா குடியமைப்பு
பொள்ளாச்சி – 1

# அணிந்துரை

## குடிசை கோபுரமாகிறது

சிற்பி

குழந்தை பூவின் இதழ்களைப் போன்ற விரல்களை ரகசியமாய் மூடுகிறது. சற்று நேரம் கழித்து மூடிய விரல்களை மெல்ல விரிக்கிறது. நீல நிறத்தில் வெள்ளைக் கோடுகள் போட்ட ஒரு கோலிக்குண்டு! ஒரு பிரபஞ்சத்தையே கைக்குள் அடக்கிவிட்ட உவகையில் கொள்ளைச் சிரிப்பு...

கவிதை படைப்பதும், சுவைப்பதும் இப்படி ஒரு கண்ணாமூச்சி விளையாட்டு. அந்த விளையாட்டுக்குள் ‘குடிசைவாசி’ என்கிற பேராசிரியர் மோ. செந்தில்குமாரும் ஈடுபட்டிருக்கிறார் என்பதன் அடையாளம் இந்த நூல்.

செந்தில்குமாருக்குள் திறமைகள் கொலுவீற்றிருப்பதை அவர் மாணவராக இருந்த காலம் முதல் நான் நன்கறிவேன். பாரதியார் பல்கலைக்கழக முதுகலை வகுப்பில் மலையாள மொழியை நான் ஒரு பாடமாக்கியபோது அதனை வெகுவிரைவில் கற்றுக்கொண்டு தன் முனைவர் பட்டத்துக்கு மலையாளக் கதைப்பாடல்களை ஒப்பாய்வுக்கு எடுத்துக்கொண்டபோதும் சரி... புதிதாகக் கணிப்பொறிப் பாடம் கற்றபோது துறையிலிருந்த கணிப்பொறியை உடனடியாக இயக்கக் கற்றுக்கொண்டு பயன்படுத்திய போதும் சரி... பொழுதுபோக்காய்ப் படித்த புகைப்படக் கலையில் தேர்ச்சி பெற்ற போதும் சரி... வாய்ப்புகளைத் திறமைகளை வளர்க்கும்

படிக்கட்டுக்களாய் மாற்றுவதில் வல்லவராகச் செந்தில்குமார் திகழ்ந்ததை நான் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையின் செய்திமலருக்கு ஆசிரியப் பொறுப்பேற்றுக் கொண்டபோது, அவ்வப்போது 'குடிசைவாசி' என்ற பெயரில் கவிதைகள் படைக்கத் தொடங்கியதும் இந்த வரிசையில் வந்த திறமைதான் என்பதை என்னால் கண்டுகொள்ள முடிந்தது.

'குடிசைவாசி' என்ற புனைபெயர் என்னைக் கவர்ந்தது. மோகனமான புனைபெயர்களில் தம்மைப் புலப்படுத்திக்கொள்ளப் பலரும் விழைந்த போது இவருக்கு இப்படிப் பெயர் சூட்டிக்கொள்ள ஆவல் ஏற்பட்டதன் பின்புலம் எனக்குத் தெரியும். அதனாலேயே 'குடிசைவாசி' கவிதைகளை விரும்பிப் படிக்கும் வாசகர்களில் ஒருவனாக நான் இருந்து வந்திருக்கிறேன். இன்று 'குடிசைவாசி'யின் கவிதைகள் தொகுக்கப்படுகின்ற சூழலும், 'நடுத்தெருவில் சத்தியம்' என்ற பெயரில் அவை வெளிவருவதும் எனக்கு அகநெகிழ்வைத் தருகின்றன.

தலைப்புகளோடும், தலைப்புகள் இல்லாமலும் இந்நூலில் கவிதைகள் காணப்படுகின்றன. நூலின் தலைப்பே கவிஞரின் செய்தியைத் தாங்கியிருப்பதால் தலைப்புகள் அவசியமில்லைதான்.

சத்தியம் நடுத்தெருவில் நிற்கிறது; கூடை நிறையச் சத்தியம் இருந்தும், கூவிக் கூவி விற்பனை செய்ய முயன்றும் அது விற்பனையாகவில்லை என்ற ஆதங்கம் நூல் முழுவதும் விரவிக் கிடக்கிறது.

இதன் காரணம் என்ன? யாருக்கும் சத்தியத்தை அடையாளம் காட்ட முடியவில்லை. பொய்மையில் கழுத்துவரை புதைந்து போயிருக்கும் மக்கள் எப்படி அதைக் கண்டு சொல்ல முடியும்?

குழந்தையின் கேள்விக்குப் பொய்க் கணக்கு அப்பா, சீரியலில் சிக்கிய அம்மா, எல்லாம் தெரிந்த ஆசிரியர், இனிய நண்பன் யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. காரணம் என்ன என்று கவிஞர் வியக்கிறார். அதற்கு அடுத்த கவிதையிலேயே

பதிலும் இருக்கிறது. சத்தியம் பேசுகிறவர்களைப் புதைத்து விட்டுத்தான் மறுவேலை பார்க்கிறது சமுதாயம்.

சத்தியத்தை வறுமையோடு உடன் பிறப்பாய்ப் பார்க்கிறார் குடிசைவாசி. அதனால்தான் பிரபஞ்ச வெளியில் குடியேறத் தோன்றுகிறது கவிஞருக்கு. எட்டி உதைக்கப்பட்டு சாக்கடையில் கிடப்பதான அனுபவம் விளைகிறது. இது முற்றிலும் உண்மையல்ல என்றாலும் குடிசைவாசி தான் பெற்ற அனுபவ முத்திரைகளால் இவ்வாறு எண்ணுகிறார்.

'வீட்டில் இல்லையென
அப்பா
சொல்லச் சொன்னார்'

என்று முதல் பொய் விதைக்கப்பட்டதிலிருந்து அமோக விளைச்சல் ஏற்பட்டு விடுகிறது.

பொய்களால் புனையப்படும் வாழ்வியலிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை. அதற்குள்ளேயே கூண்டினுள் பட்சியாய் அலைமோத நேர்கிறது. விளைவு – ஒவ்வொரு மனிதனும் தன்னையும், தன் அடையாளத்தையும் இழந்து விடுகிற அவலம், பாழாய்ப் போன வாழ்வைச் சூழ்ந்து கொள்கிறது. தானும் ஒரு ஈயாய் மாறி மொய்ப்பதே வாழ்க்கை ஆகிவிடுகிறது. காஃப்கா தான் ஒரு கரப்பான் பூச்சியாக மாறிப் போனதாகக் கதை சொல்கிறார். வேளாண் சமுதாயம் வெடித்துச் சிதறித் தொழில்நுட்ப யுகம் பிரளயமாக நுழைந்த போது செயலற்று நின்ற மனிதனைப் பூச்சியாகப் பார்த்தார் காஃப்கா.

அதுபோன்று 'கூட்டத்தில் கூடி நின்று கூவிப் பிதற்றும்' அவலத்தை ஈயாய் மாறும் இழிவாகப் பேசும் குடிசைவாசியின் கற்பனை பாராட்டுக்குறியது. 'சுயம் தொலைத்த நாகரிகத்தில்', 'ஈயாய் மொய்ப்பதே இன்பம்! இன்பம்!' என்பது நுண்ணிய பார்வை மட்டுமல்ல, நம் சமகாலம் பற்றிய விமர்சனமும் ஆகும்.

'நாலு கால் பாய்ச்சலில் நவீன வாழ்க்கை' எல்லை கடந்த நெறிகளில் திளைக்கிறது. மேலை நுகர்வுச் சமுதாயம் இந்தியாவில்

இறக்குமதி செய்யப்பட்ட சூழலில் விழுமியங்கள் பாதையோர விளிம்பில் பெருக்கித் தள்ளப்படுகின்றன. நவீன நாகரிக தேவதை முன் இந்திய நாடு வளர்த்துப் போற்றிய வாழ்வியல் மதிப்புகளுக்கு மாலை போட்டு பலிபீடத்தில் நிறுத்தியிருக்கிறார்கள். வெட்டப்படுவதுதான் பாக்கி.

"மேடை அளாவி
மோகம் துளாவி
பொய்யணி மங்கையரின்
வாத்ச்யாயனக் கூத்து"

எனக் குடிசைவாசி நொந்து போகிறார். சத்திய சோதனைகள் ஒவ்வொரு கவிதையிலும் தொடர்கின்றன.

வேளாண்மையை அழிக்கும் மான்சாண்டோ விதைகள், திருட்டுத் தமிழ்ப்பணி, தொழில்நுட்பக் கழிவுகளால் பாழகும் பூமி என சத்தியத்துக்கு ஆயிரம் வேலிகள் – வளர விடாமல் அழிக்கும் முள் வேலிகள்!

குடிசைவாசியின் சத்தியத் தேடலுக்கு நடுவே அங்கங்கே கானகப் புல்வெளியில் கண் சிமிட்டும் பெயர் தெரியாத பூக்களைப் போல அழகிய கவிதைத் தொடர்கள். இந்த வகையில் பனித்துளி பற்றிய கவிதை அபூர்வ மூலிகை போல் காட்சி தருகிறது.

*"புல்லின் நுனியில்*
*ஒளி தரும் ஓவியம்*
*சூரிய ஒளியின்*
*அழகுக் கோலம்*
*களங்கமற்ற*
*கண்ணாடிப் பூக்கள்*
*அழிவது ஒளியால்*
*என்றிருந்தாலும்*
*அழகாய் அழியும்*
*பனித்துளி வாழ்வு"*

அடடா! பனித்துளி போல் சில கணங்கள் வாழ்ந்தால் போதாதா என்று ஆதங்கம் கொள்ள வைக்கும் அருமையான கவிதை.

கவிதையின் வெற்றி அந்தரங்கமான ஆத்மாவைப் போய் வருடுவதில்தான் இருக்கிறது. தன் மனைவியின் நிரந்தரப் பிரிவு குறித்த கவிதை, வறுமையின் வாரிசு நான், குழந்தைகள் பற்றிய கவிதைகள் ஆகியன அனுபவச் செழுமையைச் சேர்க்கின்றன.

குடிசைவாசி தன் கவிதைகள் மூலம் கோபுரவாசி என்பதை நிரூபித்திருக்கிறார். அவருக்கு என் வாழ்த்துக்கள் என்றும் உரியன.

*

இங்கே ஒரு பின் குறிப்பைச் சேர்க்கிறேன். பேராசிரியர் மோ. செந்தில்குமார் ஓர் அறிவாளி ஆவார் என்பதை நான் எதிர்பார்த்திருந்தேன். கவிஞராவார் என்று நான் கருதியதில்லை.

சாகித்திய அகாதமி விருது பெற்ற என்னுடைய 'ஒரு கிராமத்து நதி'யைக் கணிப்பொறியில் பதித்து, அழகிய அட்டைப்படமாகப் புகைப்படமும் எடுத்துக் கொடுத்து அழகு செய்தவர் செந்தில்குமார். எனக்கு அகாதமி பரிசு கிடைத்தபோது அவரிடம் 'இது உங்களுக்கும் சேர்த்துத் தான்' என்று நான் சொன்னேன்.

இந்தக் கவிதைத் தொகுதியைப் படித்த பிறகு, இப்படியே தொடர்ந்து எழுதினால் இவருக்கும் அந்தப் பரிசு கிடைத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

20.11.2008

அன்புடன்

சிற்பி பாலசுப்பிரமணியம்

எத்தனை நாள்
மூடி வைப்பது?

சேர்த்துச் சேர்த்து வைத்ததில்
பாரம் தாங்கமுடியவில்லை!

திறந்து காட்டினால்
திட்டிவிடுவார்களோ!

பதுக்கிப் பதுக்கி
மனம் பாழ்பட்டுப் போனதே!

திணிக்க இடமற்று
மனக்குடிசை...!!

ஒளித்து வைக்க
இடமில்லை...

வலிதாங்க முடியாமல்
வார்த்தைகளாய்ச் சிந்திவிட்டேன்
வாசித்துப் பாருங்கள்
சத்தியம்!

கூடை நிறைய சத்தியம்
கூவிக் கூவித் திரிகிறேன்
தெருத்தெருவாய்
வீடுவீடாய்
எட்டிப் பார்க்கவோ
தொட்டுப் பார்க்கவோ நாதியில்லை.

‘அப்பா!
சத்தியம் எப்படி இருக்கும்?’
குழந்தையின் கேள்வியில்
வியர்த்துப் போன தந்தை
நாளை சொல்கிறேன்
அலுவலக அவசரம்...
பொய்யாய் எழுதிய
கணக்குகளோடு
புகைகக்கப் பறந்தார்
வாகனத்தில்...

‘அம்மா!
சத்தியம் எப்படி இருக்கும்?’
சீரியலில் சிதைந்து கிடந்த தாய்
சிந்தனையோடு பார்த்தாள்...
ஆசிரியரிடம் கேள்
‘எனக்கு அவசர வேலை இருக்கிறது.’

‘ஐயா!
சத்தியம் எப்படி இருக்கும்?’

ஆசிரியரோடு வகுப்பறையும்
ஆச்சரியத்தில் உறைந்தது.
‘விவகாரமான கேள்வி
நிறுத்திக்கொள்
பாடம் படி...’

நண்பனைக் கேட்கலாம்...
வாங்கிய எட்டு மதிப்பெண்ணை
எண்பதாய்த்
திருத்திக்கொண்டிருந்தான்.

ஒருவேளை
விடையில்லாத கேள்வியோ?
கேட்டுப் பயனில்லை.

**மரணத்தின் முகத்தில்...**

என்ன இது
என் பேர் அடிபடுகிறதே?
ஓடிப் பார்த்தேன்...

மரணத்தின் முகத்தில்
நான் உறைந்து கிடக்க
சுற்றி நின்று
சத்தியம் பேசியது கூட்டம்...

ஆகா...
மரணத்திலாவது நான்
மறுபிறவி எடுக்கிறேனே...

ஆனந்தத்தில் நான்
ஆடியகூத்தில்
மயானம் சென்று
திரும்பியது கூட்டம்
என்னையும் புதைத்துவிட்டு...

பிரபஞ்சத்துக்கு வெளியே
கூடுகட்டிக் குடியேறப் போகிறேன்!
உற்றுப் பாருங்கள்
எதுவும் இல்லை என்னோடு
கோவணம் தவிர...

காந்தி வந்தால் தந்தி கொடுங்கள்
கனவுகளோடு வருகிறேன்.
ஓஷோ வந்தால்
இடம் ஒதுக்கி வையுங்கள்
ஓடி வருகிறேன்.
பாரதி வந்தால்
ஒதுங்கி நில்லுங்கள்
எரிவேன் விழிநெருப்பாய்...

பட்டுக் கம்பள விரிப்பு
பாதை நெடுகத் தோரணம்!
கோட்டைபோல்
கூட்ட மேடை...!

எட்டிப் பார்த்தேன்...
எட்டி உதைத்தார்...
‘பிச்சைக் காரர்களுக்கு
அனுமதியில்லை’

சத்தியம் விழுந்த இடம்
சாக்கடை!

‘வீட்டில் இல்லையென
அப்பா
சொல்லச் சொன்னார்’

முதுகில் விழுந்த
முதல் அடியில்
முகத்தில் செத்தது
புன்னகை.

பொய் பழகிய
முதல் நாள்!



உயிரின் வலியாய்
நகரும் நிமிடங்கள்
கனலாய்ச் சூழ்ந்து
கருகும் காலம்
இழக்கவும் இயலாது
இருக்கவும் கொள்ளாது
நகரும்
மரணச் சுரங்கம்.

எதில் வாழ எதை இழப்பது?
எதை இழந்து எதில் வாழ்வது?

குடையும் கேள்விகள்
உடையும் மனத்தில்
ஒத்தடம் தேடி
அலையும் கால்கள்.

பிரிவா? உறவா?
பிரியா உறவா?

மூடி மறைத்து
ஓடி ஒளிந்து
காலம் கடந்து
கண்கள் திறந்து
விடவும் முடியவில்லை
விரும்பவும் துணிவில்லை

மரணத்தின் முன்னே
மணித்துளியேனும்
முழுதாய் நிறைவாய்
நேர்மையின் தடத்தில்
வாழ்ந்திடத் துடித்தல்
பிழையா**?** தவறா**?**

## அடையாளம் தேடி...



அகன்ற பிரபஞ்சத்தில்
அடையாளம் தேடி
அலையும் மனத்துடன்
நேற்றைக் கடந்து
இன்றையும் கடந்து
எங்கோ
காலத் தொலைவில்
ஏழு கடல்
ஏழு மலைகளுக்கு அப்பால்
அற்புத வாழ்க்கைக்
கனவுப் பயணத்தில்
என் புன்னகையை
யாரோ பறித்துக்கொண்டார்கள்...

புன்னகை போனால்
பரவாயில்லை...
ஓடியதில்
செருப்புத் தேய்ந்து
பாதம் தேய்ந்து
கணுக்காலையும்
காணவில்லையே...

அவசரத்தில்
மறந்துவிட்டேன்
பாதம் தொலைத்த சுவடுகளையும்...!

எங்கு பார்த்தாலும்
ஈயாய் மொய்த்துக் கிடக்கும் கூட்டம்...

நானும் மொய்க்காவிட்டால்
நாகரிகம்
ஒதுக்கிவிடும் பயத்தில்
ஓடி ஓடி மொய்க்கிறேன்
தெருவாரோடு...
ஊராரோடு...
நண்பர்களோடு...
நாட்டினரோடு...

என் அடையாளம் இழக்கும்
கூட்டத்தில்
என்னையே எனக்கு
அடையாளம் தெரியவில்லை...!

ஒற்றையடிப் பாதைகளை
அழித்துவிட்டபிறகு
என் முகம்
அழிந்ததில் வியப்பில்லை!

‘நான்’களின் கூட்டம்
நடக்கின்ற பாதையில்...
விதிகளின் நதிகள்
பாய்கின்ற ஆறுகளில்...
சேறு பூசிக்கொண்டு
சுயம் தொலைத்த நாகரிகத்தில்
கூட்டத்தோடு கூட்டமாய்
கொக்கக்கோலா கொண்டாட்டம்!

அறிவு யுகத்தின்
ஆனந்த நடனத்தில்
ஈயாய் மொய்ப்பதே
இன்பம்...! இன்பம்...!

என் வாய்தானே...
ஆழ்மனத்திலிருந்து
சிரித்தால் என்ன?
ஆசையாய் இருக்கிறது.
கிறுக்கன் என்று உலகம்
கிழித்துப் போட்டுவிட்டால்?

ஆளுமைப் பயிற்சியில்
அளவாய்ச் சிரிக்கக்
கற்றுத்தான் கொடுத்தார்கள்...
கண்ணாடி முன்னால்
சிரித்து வைத்தேன்
சிரித்தது கண்ணாடி...

பொது இடத்தில்
புன்னகைக்க வேண்டுமாம்...
அலுவலகத்தில்
ஒளித்து வைக்க வேண்டுமாம்
உதடுகளில்...

நண்பனும் சொன்னான்
'இளித்து வைக்காதே!'

சிரித்துப் பழகி
சிரித்துப் பழகி
தொலைக்காட்சிப் பெட்டிக்குள்
தொகுப்பாளினிகள்
முகத்தில் மகிழ்ச்சியை
அப்பிக்கொண்டு
அரிதாரம் கலையாது
சிரிக்கிறார்கள்!

எச்சில் வடிய
என் குழந்தை சிரிப்பதுபோல்
உயிர்வரை சிரிக்கவேண்டும்
எங்கே சிரிப்பது?
எப்படிச் சிரிப்பது?

பூக்காரி போன தெருவில்
குப்பை வண்டி
பிரபஞ்சமே நாறுகிறது!

வண்டி நிறையக்
குப்பைகள்...

கனவுக் குப்பைகள்
காற்றில் பறக்க
எனது நேற்றையும்
வாரிச் செல்கிறாள்
காலக்குப்பைக்காரி!

எத்தனை முகங்களுக்குள்
எனது பயணம் நடந்திருக்கும்?
தேடுவது எதுவென்று
தெரியாது தேடித் தேடி...

நுழைந்த வேகத்தில்
திரும்பி வந்த தருணங்கள்
எத்தனை... எத்தனை...

ஒன்றுமற்ற திகைப்பில்
ஓயாது அலைந்து
சஞ்சலமும் சபலமும்
ஒட்டிக்கொண்டு
கணநேரக்
கனவுப் புன்னகைக்குள்
மிதந்து... மிதந்து...
வெற்று வெளியில்
நித்தம் நித்தம்
தேடித் திரிவதென்ன?

கண்டு தழுவி
நுகர்ந்து ருசித்து
முன் தெரியாத
ஒன்றைத் தேடி
வசீகரிக்கும் முகங்களுக்குள்
சலிக்காமல் ஓடி...

எதுவென்று அறியாது
ஏனிந்த வேகம்?
இதுதான் இதுதானென்று
எத்தனை முகங்களில்
உனது பயணம்
நின்று சலித்து
மீண்டும் தொடங்கி
மாய வெளியில்
மங்கல் இருளில்
எந்த ஒளிக்காய்
இத்தனை வேகம்?

பாவம் தீர்க்க...
பணம் சேர்க்க...
பதவி வாய்க்க...
பணக்காரன் ஆக...
எட்டுப் பரதேசிகளுக்கு
அமுதுபடைக்க அர்ச்சகர்
கட்டளை...

ஒன்பதாவது பிச்சைக்காரன்
ஓடிவந்து கைநீட்டுகிறான்...
கொடுக்க முடியாதென்று
திரும்பி நடக்கின்றேன்
பாவச்சுமையுடன்...

ஆடையின்
மேடுபள்ளங்களில்
தடவித் தடவி சலித்துப்போன
கண்கள் நிறையக்
காமத் தழும்புகள்...

மரணம் வரையில்
காமம் தேடி
மங்கிப்போன கண்கள்...

உண்மை மூடி
ஒழுக்கம் பேசி
உலகம் போகும் பாதையில்
நீயும் நானும்
போகாவிட்டால்
புழுதிவாரித் தூற்றும்...

என்னைக் கொண்டு
எழுதிய கவிதையின்
உண்மைப் பொருளைத்
தேடிய கண்களில் எல்லாம்
காமம்.

ஒரு கண்ணில் மட்டும் இல்லை
உண்மை...
உலகம் எல்லாம் உலகம் எல்லாம்
உண்மை உண்மை உண்மை.

வண்ண விளக்கு
ஒளித்தூரிகையில்
அரங்கச் சுவர்களில்
ஓவியக் கோலங்கள்...

போதை பொங்கி
வாசல் வரை
நிறைந்து ததும்பும்
கூட்டக் கும்மாளத்தில்
மேடை அளாவி
மோகம் துழாவி
பொய்யணி மங்கையரின்
வாத்சாயனக் கூத்து...

காக்டெய்ல் களிப்பில்
கோப்பையோடு கோப்பையும்...
கனவுத் திளைப்பில்
தோளோடு தோளும்...
முந்தானை மூடாத
மார்போடு மார்பும்...
உரசிச் சிலிர்த்து
ஆனந்தக் கிறக்கம்...

உடை
இடை
இதழ் பற்றி
அமுதக் காம
விருந்தோம்பல்...

கண்ணகியைத் தோற்றுக்
காலனின் காலடி வீழ்ந்த
பாண்டியன் புத்தியில்
மத்தளமிட்ட வேத்தியல்
இசைக்கூத்தாய்
நவீனப் பொதுவியல் நர்த்தனம்...

ஆடை நழுவலின்
போதைக் கிறக்கத்தில்
சொக்கப் பள்ளியறைக்
கெக்கலிப்பில்
டாலர் தேசத்துக்
கனவுக் கோட்டையில்
மதுவும் மாதுவும்
மயங்கிக் கலந்து
இருண்ட இரவில்
அறிவு யுகத்தின்
இளமைக் குதூகலம்...

நாலுகால் பாய்ச்சலில்
நவீன வாழ்க்கை.

## தமிழ்ப்பணி!

கட்டுரை எழுத
நூலகம் செல்கிறேன்...

என்ன?
புத்தக அலமாரிக்குள்
புகுந்து கிடக்கின்றாய்?

Reference எடுக்கிறேன்.

கட்டுரைத் தலைப்பைப்
புத்தகத் தலைப்பில்...
பொருளடக்கத்தில்...
அலமாரி அலமாரியாய்த்
தேடித் தேடி
நான்கு நூல்களைக்
கண்டுபிடித்துத்
தூசு தட்டியெடுத்து
நூலுக்கு ஒரு பத்தி
பொறுக்கிப் போட்டு...
வார்த்தை மாற்றி
வாக்கியம் மாற்றி
கருத்து மாறாது
பொருத்தமுறக்
கட்டுரை தயார்.

தட்டச்சுச் செய்து
தலைப்பின் அடியில்
பெயரும் பதிவு செய்தாகிவிட்டது.

முன்னூறாய் இருந்ததை
ஐநூறு ஆக்கிவிட்டார்கள்...
வரைவோலையுடன்
பயணப்பட்டது கட்டுரை.

பன்னாட்டுக் கருத்தரங்கம்
பகுதி பகுதியாய்
தொகுதி தொகுதியாய்
கட்டுரைகள் வாசிப்பு...

இரண்டு தலையனைப்
புத்தகங்களுடன்
சான்றிதழ் பெற்று
வீடு வந்து
தன்விபரக் குறிப்பில்
தவறாது சேர்த்து
அப்பப்பா...
தமிழ்ப்பணி
அதிகம்... அதிகம்...

'நாயும் பிழைக்கும்
இந்தப் பிழைப்பு'

விண்ணப்பித்த நாளில்
தொடங்கிய யாத்திரை
வெற்றிக்கனி கிட்டும் வரை
விடுவதாய் இல்லை...

எத்தனை செலவு செய்தும்
எத்தனை கால்கள் பிடித்தும்
எத்தனை சத்தியம் கெடுத்தும்
வெற்றிக்கனி கிட்டும்வரை
விடுவதாய் இல்லை...

கோப்புகள் நகர்த்தத்
தளபதிகள்
பாசறை அமைத்துப்
பக்குவமாய்ப் போரிடுகின்றனர்..

கிடைத்துவிடும் வெற்றி
ஊர் புகழ, உலகம் புகழ
கிடைத்துவிடும் வெற்றி...

மனச்சாட்சி மடியில்
நழுவி விழுந்திட
புகழுரையில் புளகாங்கிதம்
மாலைகளில் மாவீரக் கெக்களிப்பு

வெற்றிக்கனி கிட்டும்வரை
விடுவதாய்இல்லை...

என்ன தென்றலே
இளைத்துப் போனாய்?
ஈரச்சுவையுடன்
மேனி தீண்டும் உன்
இளமைச் செழிப்பை
எங்கே தொலைத்தாய்?

மனிதன் உண்டு மாய்ந்து போக
மருந்தின் உக்கிரம் விதையில் சேர்த்து
விளைந்து நிற்கும் நெற்பயிர் தீண்டி
உயிர்வரை விஷமாய் உருகிப்போனேன்!

பூச்சிக் கொல்லி நஞ்சுகள்
மூச்சு முட்டப் பாய்ந்ததில்
மண்ணுயிர் எல்லாம் மடிகின்றன.
நான் மட்டுமெப்படி நன்றாயிருப்பேன்?

அயல் மகரந்தம்
தன் மகரந்தம் அழிந்துப்
பொய் மகரந்தம் பூசிக்கொண்டு
மான்சாண்டோ மலட்டுப் பயிர்கள்
மண்ணில் கால் பதித்துவிட்டன.

என் உறவுப் பரம்பரை
உதிர்ந்த பின்னர்
மலட்டுப் பண்ணையத்தில்
நான் மலர்ந்திருப்பேனா?

நாடு செழிக்க
நம்மாழ்வான் வருகைக்காய்
வீதியோரம் காத்துக் கிடக்கிறேன்.

உன் செருப்பில்
ஒட்டிய மலமா?
ஆடையில்
அப்பிய அழுக்கா?
தலையில்
விழுந்த எச்சமா?
மகிழ்வைத் தொலைத்த
விருந்தாளியா?

நீ
பதுக்கியதெல்லாம்
பார்த்தேன் என்றா
மிதிக்கிறாய் என்னை?

இருட்டை நேசித்து
இருட்டை நேசித்து
வெளிச்சம் காணக்
கூசும் உன் கண்கள்?

சூரியச் சுடரை மூடிய இருளை
விடியல்காரன் விரட்டியடிப்பான்
எங்கே ஓடுவாய் என்னை விட்டு?

இப்படிக்கு
*சத்தியம்*

எழுதியழித்து
அழித்து எழுதி
மை தீரும் வரை
மீண்டும்... மீண்டும்...

மணியடித்துவிட்டதே...

காலத்தாள்
கசங்காமல் அப்படியே
என் பிள்ளையின் கையில்
மை நிறைத்த பேனா...

உன்னை
மயானம் அனுப்பிய
மரண நாளில்
கூரைமேல் சோறிடக்
கூறினார்கள்.

எறிந்த உணவைக்
கவ்விச் சென்ற
காக்கையில்
உன்னைத் தேடினேன்.

தெற்கும் வடக்குமாய்த்
திரும்பித் திரும்பிப்
பதற்றம் தணியாது
உற்றுப் பார்க்கும்
காக்கையின் விழிகளில்
நுழைந்து
என்
உயிரைத் தேடினேன்...

கணப் பொழுது
என்னுள் அவிழ்ந்த
எண்ணங்களை
எப்படிச் சொல்வது?

காக்கையாகவேனும்
நீயிருந்தால் போதும்...

காக்கையை ஒருகணம்
காதலித்தும் விட்டேன்.

'கிவி'* என மனம்
கூவியழைக்கிறது.

உள்ளம் கிளர்ந்து
உணர்ச்சியில் நனைந்து
எண்ணம் சிதைந்து
எல்லாம் கடந்து
காக்கையும் நானும்...

உன் மேனிக் கதகதப்பை
இறகுகளின் இடுக்குகளில்
வருடித் தேடினேன்...

---

*மனைவியை செல்லமாய் அழைக்கும் மொழி

கரைச்சலின் இறைச்சல்
காது கிழிக்க
கண்கள் திறந்தேன்...

கூரையில்
கூட்டம் கூட்டமாய்
காக்கைகள்...

மனத்துக்குள்
மரணத்தின்
மௌன ஓலம்
கண்களில் நீராய்
கரைந்தோடியது....

எப்போது வருமென்று
தெரியவும் இல்லை...
எப்போது தொலையுமென்று
புரியவும் இல்லை...

வருவது எது?
தொலைவது எது?

தெரியாதது வருமா?
தெரிந்தது தொலையுமா?

ஒன்றும் விளங்கா
ஊமை இருளில்
தட்டுத் தடுமாறித்
திரியும் கனவுகள்.

## தேசத்தந்தையே...

நடந்து நடந்தே
பாரத மண்ணுக்கு
அகிம்சையை ஊட்டிய
பாரதமே...

சத்தியத்தை ராட்டையில்
நூற்றுக் கொடுத்தாய் அன்று
கம்பீரமாக அணிந்தது
பாரதம்!

நாங்களும் நூற்கிறோம் இன்று
சாக்கடைப் புழுக்களை!

பேச்சுச் சுதந்திரம்
பெற்றுத்தந்தாய்
ஊரைவிட்டு
உண்மையை விரட்டிவினோம்!

எழுத்துச் சுதந்திரம்
வாங்கித் தந்தாய்
பொய்யெழுதிப் பொய்யெழுதிக்
கையழுகிப் போனோம்!

தெருக்களில் மட்டும்
விளக்குகள் பொருத்தினோம்
நெஞ்சம் இன்னும்
பொய்மை இருளில்!

கர்ப்பத்தில் வைத்து
நீ
அடைகாத்துப் பொறித்த குஞ்சை
தாராளமயக் கசாப்புக் கடையில்
காசாக்கினோம்.

இன்னும் என்ன இருக்கிறது?
நச்சுக்காற்றை
நகரத்திலிருந்து
கிராமத்துக் கருவறைக்குள்
கொண்டு போனோம்.

தேசத்தைத் தூய்மைப்படுத்த
இன்னும்
நீ வருகிறாயா?

எத்தனை சத்தியம்
கொண்டு வருவாய்?

எத்தனை சத்தியாக்கிரகம்
இங்கு செய்வாய்?



வெற்றிடத்தில் அன்புதேடும்
என்விரல்களுக்குள் உன் விரல்கள்
இணைவது எப்போது?

பரபரப்பாய்
பஸ்பிடிக்கச் செல்லும்
ஒவ்வொரு நாள் காலையிலும்
பிஞ்சு விரலசைத்து
‘டாடா’ காட்டச் சொல்கிறாய்...

எடுத்து
அணைத்துக்கொண்டால்
அலுவலகம் செல்லும்
ஆடை கசங்கிவிடும்!

பேருந்துப் புதைசேற்றில்
அங்கமெல்லாம் கசங்கி
வீடுவந்து சேர்கிறாயே!!

ஒருநாள் மாலையிலாவது மடியமர்த்தி...
தொலைக்காட்சித் தொடர் நிறுத்தி...
என் முகம்பார்த்துப்
பால் கொடுத்ததுண்டா?

‘ஆறு மாதம் அவசியம் தாய்ப்பால்’
மருத்துவர் சொன்னாரே!
ஆறு நாளாவது
குடித்தேனா நான்?

உன் மடியின் வாசனையும்
உடலின் கதகதப்பும்
எனக்குள் ஊறவில்லை
ஆனாலும் நான் உன்பிள்ளை!



இயற்கைச் சுரண்டல்
செயற்கையின் பெருக்கம்
சாதனை மனிதனின்
சோதனை முயற்சிகள்...!
வேதனையின் விளிம்பில்
பூமித்தாய்...!

விஞ்ஞானக் குப்பைகள்
வான வீதியிலும்..
மலையும் கடலும்
மலடுதட்டிப்போக
ஓங்கி வளருது விஞ்ஞானம்.

அசுத்தம்
ஆயிரம் கோடிக்கு
மூச்சுக் காற்றுக்கு ரூ.100!

தீமைகள் களைந்து
நன்மைகள் பெருக்கி
பூமியைக் காக்கப்
புதுவிஞ்ஞானம் ஏது?



காய்ந்து கருகி ஓய்ந்த மலரில்
தேனைத் தேடித் திரிந்த எனக்கு
என்று மலரும் புத்தம் புதுமலர்**?**

நறுமணம் நனைந்த புதுப்புது மலர்களில்
தேன்துளி பருகித் திளைப்பது எப்போது**?**

சோலைகள், வனங்கள்
சுட்டு எழுந்த கான்கிரீட் காடுகள்

மொட்டைச் செடிகள்
மலட்டு மலர்கள்
பொட்டல் வெளிகள்
பிறந்த மேனியாய்
பூமி வாழுமா**?**

இன்னுமொரு நூற்றாண்டாகிலும்
எங்கள் பிள்ளைகள்
வாழ்ந்திடக் கிடைக்குமா
பூமியில் ஓரிடம்**?**



புல்லின் நுனியில்
ஒளிரும் ஓவியம்!
சூரிய ஒளியின்
அழகுக் கோலம்!
களங்கமற்ற
கண்ணாடிப் பூக்கள்.

ஒவ்வொரு இரவிலும்
உயிர்த்தல்!
ஒவ்வொரு பகலிலும்
மரித்தல்!
உயிர்பிரியும் தருணத்தில்
வாழ்க்கை ஒளிரலாம்.

அழிவது ஒளியால்
என்றிருந்தாலும்
அழகாய் அழியும்
பனித்துளி வாழ்வு.




அலையலையாய்
மனிதத் தலைகள்...
புல்பூண்டுக்கும் இடமின்றி
ஆறு நூறு கோடியில்
அதிகம்...

உணவுச் சங்கிலி
அறுந்து விழ
உயிர்கள் எல்லாம்
அழிந்து மறைய
பூமியின் உயிரில்
நூற்றாண்டுகளாய்
வேர்களும் விழுதுகளும்
விட்டுப் படர்கிறது...

அனேகம் தின்று செரித்து
வானும் மண்ணும்
அளந்து நின்றால்
நீ ஏகனாவாய்!
பிறகு என்ன ஆவாய்?

## வெள்ளம்...

ஆண்டுக்கு ஒருமுறை
ஆற்றில் வெள்ளம்...

நகரத் தெருக்களோ
வற்றாத நதிகள்!
கரைபுரண்டு ஓடும்
மனித வெள்ளம்!

குறுகலான சந்துகள்
காட்டாறுகள்!
தெருவே ஸ்தம்பிக்கும்
வெள்ளச் சீற்றம்!
முகடு முட்டும்
வாகனப் பிதுக்கம்!
நுங்கும் நுரையுமாய்
புழுதியும் புகையும்!

சிவப்பு விளக்கில்
தேங்கும் நதிகள்!
பச்சை விளக்கில்
பாயும் புயல்கள்!
மரண வேகம்
மஞ்சள் விளக்கில்!

எந்தக் கடலில்
மூழ்கவோ
இத்தனை வேகம்???



வெட்டவெளியில்
பட்டப்பகலில்
மொட்டை வெய்யிலில்
ஒட்டுத்துணியின்றி
வேர்வைக் குளிப்பில்
ஏக்கப் பார்வை
ஏன் பிள்ளாய்?

பள்ளிக்கூட வாயில்படி
பாதங்களில் பட்டதுண்டா?
அகரமும் உகரமும்
நாவில் இனித்ததுண்டா?

வல்லரசுக் கனவு நாளில்
2020 ல்
ஏது உனக்கு இடம்?

நானும் நல்லவன்
நீயும் நல்லவன்

‘நாடு கெட்டுக் கிடக்கிறது’
நானும் சொல்கிறேன்
நீயும் சொல்கிறாய்

நானும் நல்லவன்
நீயும் நல்லவன்.

இருளும் ஒளியும்
புணர்ந்து மயங்கும்
மங்கல் ஒளியாய்
ஆடைமறைப்பின்
ஓரக் கதுப்பில்
மங்கிச்சிவந்த
மேனிப் பிதுக்க
மதுக் கோப்பையில்
வெப்பவிழி
உதடுகள் பதித்துக்
காமம் குடித்து
மோகப் பெருவெளியில்
கனவுப் பயணங்கள்...

மூடி வைத்துத்
திறந்து பார்த்து
மோகம் விதைத்துக்
காமம் வளர்த்து
நூற்றாண்டுகளாய்
வெற்றுப் பெருமூச்சில்
வெந்து கருகி
நொந்த வரலாற்றின்
குப்பைச் சகதியில்
ஈர்ப்பு விசைக்கு
எதிர்த்த வாழ்வைப்
போட்டு உடைத்துப்
போனது காலம்...

சொர்க்க ரதத்தின்
கடையாணி முறிந்து
சரிவுப் பள்ளத்தில்
பிடிமானமின்றிச்
சிதறிப்போகும்
கடவுளின் தேசத்து
ராஜபாட்டைகள்..

காளையின் முதுகில்
கனவுப் பவனிகள்
கரைந்து மறைய
கரடி கடித்துத்
தோற்றுப்போன
மனித மூளைச் செல்களில்
சிதறும் எதிர்கால
வாழ்க்கைக் கனவுகள்!

நாடி நரம்பெங்கும்
மந்தநிலையின்
வெப்பக்காற்றுப்
பாய்ந்து பரவி
உயிர்நாடியை
உலுக்கிப் பார்க்கும்
விநோதக் காட்சிகள்!

சட்டியில் இருந்தும்
அகப்பைக்கு எட்டாமல்
பசிதின்னும் வயிறுகளின்
கூட்டப் பெருக்கம்...

குளிர்பதனக் கூடாரத்தின்
திரையில் மின்னும்
டாலர் நோட்டுக் கனவுகள்
மங்கி மறைந்திட...
நாளைய வாய்ப்புக்காத்திருப்பில்
பட்டதாரிப் பசியாளர்கள்....

சப்பிரைம்...
கிரடிட் கிரஞ்ச்...
புரியாத வார்த்தைகளில்
நீர்க்குமிழியாய்
உடைந்து மறையும்
பொய்ப்பந்தல் பொருளாதரத்தில்
உலகின் வாழ்க்கை
ஊசலாட்டம்.

---

2008ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவு உலகளாவிய பாதிப்புகளை ஏற்படுத்தியது.

‘கொஞ்சமாய்ச் சிரிங்க...’
ஒளிப்படக் கலைஞன்...

என்ன முயன்றும்
தொலைந்த சிரிப்பு
கிடைக்கவேயில்லை...
படம் எடுத்தாகிவிட்டது.

அவசரமாய்
உறையைப்பிரித்துப்
படம் பார்த்தேன்...

இருண்டு கிடந்தது
சத்தியம்!

## புத்தகம்

வாழ்வும் சாவும்
ஒருசேரப் பதிவு செய்யப்படும்
வரலாறுகளின்
பதிவுச் சுரங்கம் நான்.

எழுத்து எனது மொழி

அலமாரிகளில் சிலபோது
உறங்கிக் கிடந்தாலும்
பாதையோரங்களில்
புழுதிக் காற்றில்
புரண்டு அழுதாலும்
மனித விதியை
மாற்றியமைக்கும்
மந்திர சக்தியை
ஒருபோதும் இழந்ததில்லை நான்.

என்னை வாசிப்பதும்
உன்னை நீயே நேசிப்பதும்
ஒன்றுதான்.

கம்பனும் வள்ளுவனும்
கவி காளிதாசனும்
உன் கரங்களில்
வாசி... வாசித்துக்கொண்டே இரு...
வாழ்க்கை வசப்படும்.



வரம் வேண்டி
வருவோருக்காய்
தவம் கிடக்கும்
முதுமை...

‘இறைக்கருணை கிட்டாதா’
என்றேங்கி வருவோரின்
‘மனக்கருணை வாய்க்காதா’

வாழ்க்கை
வருவோர் போவோர்
பையில்
சில்லறைக் காசுகளாய்...



வறுமையின் வாரிசு நான்

அம்மா...
என்னை
அணைத்துக்கொள்ள மாட்டாயா?

மண்ணே தாயென்று – அதன்
மடியில் விட்டுவிட்டு
ஏனம்மா நிற்கின்றாய்?
என்னை எறும்பு கடிக்கிறதே...

தொட்டிலில் இட்டுத்
தாலாட்டவா கேட்டேன்?
கட்டிலில் இட்டு – என்
கால் பிடிக்கவா கேட்டேன்?
தங்கச் சிம்மாசனம் கேட்டேனா?
தாழம்பூ மெத்தை கேட்டேனா?

அம்மா
என்னை
அணைத்துக்கொள்ள மாட்டாயா?

சங்கில் பால் வார்த்து
சாகாமல் எனைக்காத்து
ஆளாக்கி விட்டுவிட்டால்
ஆயுளுக்கும் உனைமறவேன்...

இடுப்புச் சுமையெனவா
என்னை நினைக்கின்றாய்?
வறுமையின் வாரிசு நான் – உன்
வாழ்வின் கருத்தொடர் நான்...
வாரி அணைத்துக்கொள் தாயே

எஞ்சி இருப்போரையாவது
உயிர் மிஞ்சியிருக்க விடு

முங்கி எழுந்தால்
மோட்சம் என்று
எங்கிருந்தோ உன்னை
நம்பி வந்தவர்களுக்கு
நிரந்தர மோட்சமாய்
நீ வந்தாயோ?
கரையோரம் சென்றவரைக்
காவு கொண்டாயோ?

வருவோரும் போவோரும்
கிடக்கட்டும்
உன்னுள் வாழ்வோரை
என் செய்தாய்?
படகுகளில் தாலாட்டி
பாய்மரத்தில் சீராட்டி
வாழ்வளித்து வந்தாயே
மீன்வளத்தைத் தந்தாயே

உன் காலடியே வாழ்வென்று
கரையோரம் உயிர்வாழ்ந்த
பிள்ளைகளை
அலைக்கரத்தால்
ஓங்கி அறைந்தாயே – உயிரைப்
பிரித்து எறிந்தாயே

'சுனாமி' என்கிறார்கள்
நீ என்ன
எமனின் பினாமியா?
பொங்கியது போதும்
பிள்ளைக்கறி உண்டதும் போதும்.

உன்னை நீயே சுடுகாடாக்கி
எம்மைத் துயரக் கடலில்
எறிந்தது போதும்.
எஞ்சியிருப்போரையாவது
உயிர் மிஞ்சி இருக்க விடு.

பூமித்தாயே
பூமித்தாயே
உன் பிள்ளைகள்
எத்தனை தெரியுமா?

கோடிகள்... கோடிகள்...
கோடிகள் என்று
கூடிச் செல்லும்
மனிதக் கூட்டம்

பிள்ளைப் பாரம்
தள்ளியதாலோ
ஒருக்களித்துச் சுற்றுகிறாய்?

எல்லா உயிரும்
இல்லாது போக
மனித உயிர் மட்டும்
நிரம்பி வழிகிறது.

பச்சை போர்த்த உன்
மேனியெங்கும்
கான்கிரீட் காடுகள்

நெட்டை குட்டை
சிவப்பு கருப்பாய்
மனித மரங்கள்

உன்னைத் தின்றது
போதாதென்று
விண்ணில் பாயுது
மனித இனம்

செவ்வாய் கோளும்
சீக்கிரம் நிரம்பும்.



மாலையணிவிப்பு
எனக்கு
மரணத்திற்கு முன்பு.
மரணத்திற்குப் பின்பு
மனிதனுக்கு.

நானோ..
இன்னும் சில நிமிடங்கள்
உயிர் பிரியும் பலியாடு
சலனமில்லை
என் முகத்தில்...

எப்போதும் மரணபயம்
என் உயிர் எடுக்கும்
எஜமானர்களுக்கு.

என் மரணம்
எஜமானனின்
மரணபயம் போக்குமா?



தலையில் கிரீடம்
கழுத்தில் மாலை
காலில் சலங்கை
முகத்தில் வேடம்
வயிற்றில் பசி.

கடவுள் வேடம்...
பிடிப்பது
மனிதக் கால்களை.
அருள்தரும் இறைவன்
பிச்சைக்காரனாய்?

இந்தியா
இன்னும் நடுத்தெருவில்.



என்ன தாயே
உண்ணும் போது
உன் சிந்தனை
எங்கே போகிறது?

கடந்த காலங்களில்
கனவாய்க் கரைந்த
வாழ்க்கை நினைவுகளில்
உனது எண்ணம்
ஓடுகிறதா?

தரையில் விட்டால்
நோகும் என்று
தோளில் சுமந்த
சுந்தரப் பிள்ளைக்குச்
சோறு ஊட்டிய
நினைவு வருகிறதோ?

கையில் எடுத்த உணவை
வாயில் இடும் முன்
வாழ்ந்து முடிந்த
வசந்த காலங்கள்
நெஞ்சில் முட்டி
வேதனை செய்கிறதோ?

பையன் பார்க்காவிட்டாலும்
பிள்ளை பார்ப்பாள் என்று
பிரியம் சேர்த்து
ஊட்டிய நாட்கள்
உள்ளம் வந்து
உயிரை வதைக்கிறதோ?

அன்பு... பாசம்...
பிள்ளை... குட்டி...
எல்லாம்... எல்லாம்...
உடம்பில் தெம்பும்
மடியில் பணமும்
இருக்கும் வரைதான்...

முதுமையைச் சுமையாய்க்
கருதியவர் வாழ்வும்
ஒருநாள் சுமையாகும்...
உன்னைத் தெருவோரம்
எறிந்த பிள்ளைகளுக்கும்
நாளை வயதாகும்...

கனவுப் பொய்க் கூடையில்
அத்தனை மலர்களும்
புத்தம் புதியவை

கனவுகள் விதைத்துக்
கனவுகள் விதைத்து
காலம் நெடுகிலும்
கனவுகள் விதைத்து
அறுவடையாய்
மரணம் வருகையில்
காகித மலர்களாய்
கனவுப் பூக்கள்...
பறிக்கவும் முடியாது
விற்கவும் முடியாது
சந்தைக்குப் போனால்
சல்லிக்காசு பொறாது

யாருக்கும் தெரியாமல்
ஊருக்கும் தெரியாமல்
உள்ளுக்குள் விதைத்த
கனவுகளின் வயல்கள்
மலடாய்ப் போனது
மரணம் வருகையில்.

## மைக்

கோடி கோடி கூட்டம்
மேடையேறி முழக்கம்

எத்தனை வாய்களில்
ஏங்கியிருப்பேன்
சத்தியம் கேட்டிட...

என் கழுத்தைப் பிடித்து
கையை உயர்த்தி
முகத்தைச் சுழித்து
மூர்க்கம் நிறைத்து
உமிழும் வாத்தைகளில்
சர்க்கரை இனிக்க
சந்தனம் மணக்க
ஊரே திகைக்கப்
பேசிய பேச்சில்
ஆட்சிகள் கவிழ்ந்தன
காட்சிகள் மாறின
என் கனவுகள் மட்டும்
அப்படியே...

**காதல்**

இறுகிச் சிறுத்த
இதயத் துளையில்
அடைத்துக் கொண்டு
இம்சைத் தாளமிடும்
இனிய காதலே...

வறண்ட பாறைக்குழியின்
இருண்ட இடுக்குகளில்
எப்படி முளைத்தாய்?

வெளுத்த வானம்
கனத்த வெயில்
வெப்பக் காற்று
வேரொடு பிடுங்கிட
வேண்டிய முயற்சி
இருந்தும் தழைக்கிறாய்..

தெய்வம் தொடங்கி
தெருப்புழுதிவரை
எல்லாம் அழகாய்
மின்னும் அதிசயம்
உந்தன் கொடையோ?

உயிருள் உயிரை
உருக்கிக் கலந்து
கரைந்த நெருப்பில்
அரிதாய் மலரும் அழகே!

உன்னைத்
தொட்டுத் தழுவாத
உயிரும் உண்டோ
பூமியில்?

இதயக்குழியில்
இதமாய் இசைக்கும்
மௌன ராகம் நீ!

பிரபஞ்சமே
காதலின் நர்த்தனம்!
பிறக்கும் உயிர்யாவும்
உன் இதழ்விரிப்பு!

உளறி உளறிப் பார்க்கிறேன்
உன்னை முழுதாய்
எழுதமுடியவில்லை.
சிந்தனைச் சுடுகாட்டில்
வெந்து கருகிட
மனிதச் சடமா நீ?

தோற்றவர் மொழியில்
உயிரின் துயரம் நீ!
வென்றவர் உயிரில்
வாழ்வின் தொடக்கம் நீ!



சில்லுச் சில்லாய்
சிதறிய பூமி!
‘புவிவெப்பச் சூடேற்றம்’
புலம்புகிறது ஒருகூட்டம்!

கழிவுகள் நிறைத்துக்
கழிவுகள் நிறைத்துக்
கல்லறையாகும் பூமி!

கார்பன் நிறைத்துக்
கார்பன் நிறைத்துக்
காற்றின் உயிரையும்
காவுகேட்கும் காலம்!

மரங்கள் பிடுங்கி
மலைகள் வெட்டி
ஆறுகள் வற்றி
சாக்கடை நதிகள்
பெருங்கடல் நிறைத்து
மனித நாகரிகம்
கரைகடக்கும்
21ஆம் நூற்றாண்டு...

அறிவு யுகத்தின்
அட்சயபாத்திரம்
பாட்டில் குடிநீர்!
பன்னாட்டு வியாபாரம்!
கிராமத்து வயல்களில்
துள்ளி விளையாடும்
மரபீனி விதைகள்!

ஒருதுளி மழைக்காய்
உயிர்விடும் மண்ணில்
சில்லறை பெருக்கப்
புது யுகப்பயணம்.

## உறங்கும் இரவிலும்

இருண்ட
உள்மன பூமியில்
ஊடுருவிப் பாய்ந்த
காதல் ஒளிக்கற்றை
கனவுப் பூக்களை
ஒவ்வொன்றாய்
மலர்த்திக் கொண்டிருந்த
புதிய உதயகால
வாழ்க்கை விடியலில்
உனது
மிருதுவான விரல்கள் பற்றி
என் கன்னத்தில்
ஒற்றிக்கொள்கிறேன்...
எந்த மலரிதழிலும்
இல்லையிந்த மென்மை...

உன்
இதழ் விரித்து
கூடை பூக்களை
மொத்தமாய் உதிர்க்கிறாய்
காதல் மலரை
மொய்த்துக் கிடக்கிறது
மகிழ்ச்சி...

ஆனந்தம்
நம் அந்தரங்கத்தில்
குடியேறி
நாட்கள் பலவாகிவிட்டன...

ஒ...
என்ன இது
சின்னக் குழந்தையாய்
நானும் நீயும்?
என் பாதங்களில்
ஏறி விளையாடுகிறாய்...
உன் முகத்துக்குள்
புதைந்து கொண்டாடுகிறேன்...

தழுவிக்கொள்வதற்காய்
என் துடிப்பும்
விலகிச் செல்வதாய்
உன் நடிப்பும்
காதல் அரங்கேற்றம்...

உன்
உடல் மணம் ஒட்டிக்கொள்ள
அணைத்துக்கொள்கிறோம்...
உயிருள் நறுமணச் சேகரம்
நீ இல்லாதபோதும்
மணக்கிறது..

உறங்கும் இரவிலும்
உனது விழிகளுக்குள் நானும்...
எனது விழிகளுக்குள் நீயும்...
கனவில் விழித்திருக்கிறோம்...

பிரிந்து செல்கையில்
விரிந்து செல்கிறது
கூடிக்களிக்கையில்
படர்ந்து மணக்கிறது
காதல்.

உனது காலத்தை
அவன் திருடுகிறான்...

அவன் காலத்தை
நீ திருடுகிறாய்...

மாறி மாறித்
திருடிக்கொண்டதில்
வாழ்க்கை உடைந்து
சிதறிப்போனது.

## காதல் நிமிடம்

பூமிப் பந்தை
இருட்டு கவ்வித்தின்ற
இரவு வேளையில்
சூரியச் சிலிர்ப்பு
இதயக்கூட்டில்...

எத்தனை சுகமாய் இருந்தது
அந்த நெருப்பு நிமிடம்...
இருளில் இருந்து
ஒளியில் பயணம்...
வெறுமையில் இருந்து
புதுமையில் பயணம்...

இதயக் கால்கள்
திக்குகள் கடந்து
திமிர்த்தனமாய் நடந்தன...
'நான் காதலித்துவிட்டேன்'
இறுமாப்பாய்...

இத்தனை நாளும்
எத்தனை பூக்களை
மலர்த்தி மலர்த்தி
உதிர்த்திருப்பாய்
என்வீட்டு ரோஜாச் செடியே!

ஒன்றைக்கூட ஒருநிமிடம் கூட
உருப்படியாய் என் கண்கள்
பார்க்கவில்லையே என்று
பரிதவித்திருப்பாய்...

நாளை ஒருமலர்
உன்னுள் இருந்து
மலர்வதற்காய்
இரவு நெடுகத்
தவமிருக்கிறேன்...
நீ என் காதல் மலரை
நறுமணத்தோடும்...
நளினத்தோடும்...
மலர்த்தப்போகிறாய்!

*

என்ன இது
எதைப் பார்த்தாலும்
அழகாய் இருக்கிறது?
அடடே...
மேற்கில்
உயிர்விடும் சூரியன்
ஒளித்தூரிகையால்
ஓவியம் வரைகிறானே!

மழைத்திவலைகள்
மண்ணில் வீழ்ந்து

மணக்க மணக்க
புணர்ந்து புணர்ந்து
புதுமை படைக்கின்றனவே!

காற்று
என்னைத் தழுவுகிறதா
நான் காற்றையா?
இந்தத் தழுவலில்
இத்தனை இதமா?
இந்தத் தோலைத்தானே
நேற்றுவரை
உடுத்தியிருந்தது
இந்த உடல்?

குரு தீட்சையில்
திளைத்த சிஷ்யனா நான்?
ஞானப்பெருஞ்சுடரின்
நர்த்தனம் கண்ட
ஞானியின் பூரிப்பா இது?

உண்மை பேசு என்று
உள்ளம் கட்டளை இடுகிறதே...
திக்கின்றி அலைந்த மனம்
கட்டுண்டு கிடக்கின்றதே...
வாழ்வுக்கே ஓர் அர்த்தம்
வந்துவிட்டதுபோல்
எண்ணத்தில் எதற்கு
இத்தனை முதிர்ச்சி...

காதல்
மனிதனைப் புனிதனாக்குமா?
புனிதனை என்னவாக்கும்?

*

ஓ...
என் ஒற்றை ரோஜா
உயிரில்
ஒவ்வொரு இதழாய்
மலர்த்துகிறதே...
வலியா? சுகமா?
ஒன்றும் புரியா
ஊமை முனகலா?
நறுமணம் தோய்ந்த
காதல் நிமிடம்.

கன்னம் நிறையப்
புன்னகை இதழ்கள்.

காதில் தவழும்
கருநிற ஒளிக்கற்றை.

உதடுகளிரண்டிலும்
உறவின் தவிப்பு.

பஞ்சுச் சிறகுகள் விலக்கி
மெல்லப் பார்க்கும் விழிகளில்
அன்பின் வெள்ளப் பெருக்கு.

இளந்தளிர்களாய்
இரண்டு கைகளும்.

பெண்மை ஒளிரும்
மெல்லிய மேனியெங்கும்
என்
இதயம் நிறைக்கும்
நறுமணம்.

சின்னச் சின்னச்
சித்திர அழகு
இயற்கை வடித்த
இளமைப் பூரிப்பு.

பாதம் வரைக்கும்
பார்வை தின்றும்
தீர்ந்துவிடாத தீவிர வேட்கை.

நான் அறிந்ததில்லை
அனிச்ச மலரை இன்று
உணர்ந்தேன்! உணர்ந்தேன்!
உன் உள்ளங்கைதன்னில்.

ஏக்கப் பெருமூச்சில்
பற்றி எரிந்த
இதயச் சூட்டோடு
உன் பிஞ்சுக் கையை
என் உள்ளங்கைகளில்
ஒற்றிக்கொண்டதில்....
வெப்பம் தணிந்தது
என் இதயமும்தான்.

"உயிரின் ஆழத்தில்
ஊடுருவிச் சிலிர்த்த,
நரம்புத் தாரைகளெங்கும்
நறுமணம் பரவிச் சென்ற
உந்தன் குளிர்வு
இன்னும் சிலநொடிகள்
இருக்கட்டுமே" – ஏக்கத்தில் இதயம்.



எத்தனை ராணிகளைச்
சுமந்திருப்பாய் நீ**?**

சரித்திரச் சேற்றில்
அழகு ராணிகளின்
ஒய்யார ஊர்வலங்கள்
அமிழ்ந்து போனபின்னும்
உன் இருப்பு யாருக்காக**?**

மினுமினுப்புக் குறையாத
மேனிகள் தீண்டிய
இளமைக் காலக்
கனவு ரதமாய்
வாழ்ந்த நாட்களின்
வரலாற்றுச் சுவடாய்
வாழ்வதது எதற்காக**?**

அச்சு முறிந்து
அழிந்து போன
ராஜபாட்டைகளில்
நீ சுமந்தவர்களை
உன்னோடு சுமந்து
பூமிக்கும் உனக்குமிடையில்
சிக்கி நசுங்கிய
தோள்கள் எத்தனை...
தேய்ந்த பாதங்கள்
எத்தனை... எத்தனை...

பல்லக்குத் தூக்கிப்
பசியாறினார்கள் அன்று...

இன்றும் இருக்கிறார்கள்
பல்லக்குத் தூக்கிகள்....

அறுந்த செருப்பின்
ஒட்டுதலோடு
சூரியக் கதிர்களை
எட்டிப் பிடிக்கும்
சின்னக் குழந்தைப்
பொய்விளையாட்டாய்...

தொடக்கமும்
ஒடுக்கமும் இன்றி
விரிந்து கிடக்கும்
இயற்கையின் மடியில்
மகிழ்விலும் இம்சையிலும்
மரணம்வரை
சலியாது நடக்கும்
வாழ்க்கை...
இனித்துத் தொலைத்தால்
உலகம்
இருண்டா போய்விடும்?

சதுக்கப் பூதச்
சத்திய நெருப்பு
அவிந்து போக...

பொய்யும் வழுவும்
பூத்துக் குலுங்க
இனிதாய் விடிந்தது
இருண்ட காலம்.

வள்ளுவன் வந்து
திருக்குறள் நெருப்பை
முச்சந்தியில் மூட்டி வைத்தும்...

அறுபத்து மூன்றாய்
பன்னிரண்டாய்
ஆன்மிக நெருப்பை
ஊதிப் பெருக்கி
உயிர்வரை எரியவிட்டும்...

கம்பனும் மருள்நீக்கியும்
இருள்நீக்க முடியாது
இளைத்துப் போக...

வள்ளல் பெருமான்
விரித்த கடையைச்
சுருட்டிக் கொண்டு
தெறித்து ஓடிட...

நெருப்புச் சூரியப்
பாரதிச் சுடர்
பாதை சமைத்தும்
சாத்தியப்படவில்லை.

வீதியில் வீட்டில்
உள்ளத்தில் உயிரில்
கருத்தொடர் அறுந்த
சத்தியம் சமைக்கப்
பூதம் வேண்டும்...

சட்டசபையின்
நட்ட நடுவில்...
நாடாளுமன்றக்
கூட்ட நெரிசலில்...
இருட்டுக் குருடாய்
இறுகிப்போன நீதிமன்றத்தில்...

முச்சந்தியில்...
நடுத்தெருவில்...
ஏன்
என் நெஞ்சுக்கூட்டிலும்
பூதம் வேண்டும்.

'உன் சதுக்கப்பூதத்தைச்
சமைக்க முடியுமா?'
எழுப்பிக் கேளுங்கள்
இளங்கோவடிகளை...